| | | |
|---|---|---|
| | றோயல் கல்லூரி – கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
| | தரம் 11 முதலாம் தவணைப் பரீட்சை 2021<br>Grade 11 First Term Exam 2021 | |
| | வரலாறு<br>History | நேரம் 1 மணி<br>Time 1 Hores |

## பகுதி I

01) வம்சத்ப வாகினி எனும் நூல் எழுதப்பட்டதன் நோக்கம்?

I. இலங்கையில் அரச பரம்பரை தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு

II. மகாவம்ச கதையின் விளக்க நூலாக.

III. இந்நாட்டின் சாதன வரலாற்றை எடுத்துக்காட்ட

IV. சிங்கத்துபீபத்தின் பரம்பரைக் கதையின் விளக்கமாக.

02) தொல்பொருள் மூலாதாரமான கல்வெட்டுக்கள் தொடர்பான சரியான கூற்றாக அமையாதது எது?

I. இந்நாட்டின் வரலாற்றைத் தொடர்ச்சியாகக் குறிப்பது

II. வரலாற்றுக் கதைகளில் கூறப்பட்ட சில தகவல்கள் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

III. ஆரம்பகாலக் கல்வெட்டுக்கள் "பிராமி" எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

IV. கல்வெட்டில் எழுதப்பட்ட தகவல்கள் சமகாலத்திற்கு உரியதாகும்.

03) இந்நாட்டில் காணப்படும் கல்வெட்டுக்களில் பழமையான கல்வெட்டாகக் கருதப்படுவது எது?

I. பாறைக் கல்வெட்டு
II. குகைக் கல்வெட்டு
III. தூண் கல்வெட்டு
IV. இருக்கைக் கல்வெட்டு

04) எமது நாட்டில் காணப்பட்ட பழமையான நாணயமாகக் கருதப்படுவது எது?

I. யானை மற்றும் சுவஸ்திகா உருவமுடைய நாணயம்

II. தம்பபஸ்ஸ நாணயம்

III. இலக்குமி உருவ நாணயம்

IV. கஹபண் நாணயம்

05) தற்போதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்படி வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் தொடர்பான பழமையான தகவல்கள் கிடைக்கப்பெற்ற இடம் எது?

I. உடமல்ல அகழ்வுகள்
II. பாகியன் கல அகழ்வு
III. கித்துளகல பெலிலென அகழ்வு
IV. பெல்லன் பதி பெல்லஸ்ஸ அகழ்வு

06) மினிஹால்கந்த, புந்தல மற்றும் பதிராஜ வெல் ஆகிய பிரதேசங்கள் தொடர்புபடுவது

I. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் குடியேற்றங்கள் நிறுவிய இடம்.

II. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளி வாழ்விடம்

III. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த ஈரவலயக் குகைகள் காணப்படும் இடம்.

IV. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த உலர்வலயக் குகைகள் உள்ள இடம்.



kalvi.lk

07) சிகிரியாவில் காணப்படக்கூடிய சுவர் ஓவியங்கள் தொடர்பாக, கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

I. கி. பி. 5ம் நூற்றாண்டு அரச பெண்களின் உடைகள் மற்றும் ஆபரணங்கள் தொடர்பான தகவல்களைப் பெறலாம்.

II. சிகிரிய ஓவியம் மற்றும் அஜந்தா ஓவியங்களுக்கு இடையில் ஒற்றுமை காணப்படுகின்றது.

III. புராதன ஓவியர்கள் பயன்படுத்திய வர்ணங்கள் தொடர்பாக அறியலாம்.

IV. சிகிரியாவில் உள்ள நீர்த்தொழில்நுட்பம் தொடர்பாக அறியலாம்.

08) முன்வரலாற்றுக்கால கல்லறை மயானங்கள் தொடர்பான தகவல் கிடைக்கப்பெற்ற இடம் எது?

I. ஹல்துமுல்ல
II. ராவண எல்ல
III. சிகிரிய பொத்தான
IV. மானியம் கம

09) ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் அமைந்த குடியேற்றங்கள் ஆற்றுப் பள்ளத்தாக்கை நோக்கி இடம்பெயர்ந்தமை தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்ற இடம் எது?

I. கிரிந்திஓயா பள்ளத்தாக்கு
II. அம்பன்கங்கை பள்ளத்தாக்கு
III. கலாஓயா பள்ளத்தாக்கு
IV. அனுராதபுரம்

10) தேவநம்பிய திஸ்ஸன் காலத்தில் அதிகாரம் ஒன்றுபடுத்தப்பட்டதற்கான தேவை ஏற்படக் காரணம் யாது?

I. பிரதேச ஆட்சியாளர்களிடையே சண்டை ஏற்படல்.

II. வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்புக்கு முகம் கொடுத்தல்.

III. இந்துசமுத்திரப்பகுதியில் விருத்தியடைந்த வெளிநாட்டு வர்த்தகம்.

IV. பருமகமாரால் மத்திய அரசுக்கு ஏற்பட்ட சவால்களை வெற்றிபெற.

11) கீழ்க்காணும் வரலாற்று நிகழ்வுகளை கால ஒழுங்குமுறையில் ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் விடை எது?

A. வசப மன்னன் நாட்டை பிரதேச நிர்வாக அலகுகளாகப் பிரித்து நிர்வாகம் செய்தல்.

B. நிஸங்க மல்லன் சேனைப் பயிர்ச்செய்கைக்கு விதித்த வரியை நீக்குதல்.

C. பண்டுகாபயன் கிராம எல்லைகளை நிர்ணயித்தல்.

D. துட்டகைமுனு மன்னன் நாற்திசை வாயில் தான சாலைகளை அமைத்தல்.

I) A, C, D, B  II) C, D, A, B  III) D, C, A, B  IV) A, B, C, D

12) 1ம் விஜயபாகு மன்னன் கலிங்க தேசத்துடன் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமைக்கான காரணம் யாது?

I. கலிங்க மற்றும் பாண்டிய வம்சத்தவர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடன்.

II. பாண்டிய மற்றும் கலிங்க நாட்டிலிருந்து போர் உதவிகளைப் பெற்றுக் கொள்ள.

III. அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.

IV. பாண்டிய, கலிங்க தேசத்துடன் பொருளாதார தொடர்பை மேற்கொள்ள.

13) துட்டகைமுனு மன்னன் மக்கள்மீது இரக்க மனப்பான்மையுடன் செயற்பட்ட சந்தர்ப்பமாகக் கொள்ளக் கூடியது?



kalvi.lk

I. தன்னுடன் போர் செய்து இறந்த எல்லாள மன்னனுக்கு நினைவுச் சின்னம் அமைத்தமை.

II. மிவிசவெட்டி தூபியை அமைத்தமை.

III. ரூபான் வெலிசயாவை நிர்மாணிக்க உதவியவர்களுக்கு கூலி வழங்கியமை.

IV. குளங்களை அமைத்தமை.

14) பண்டைய சமூகத்தில் வளர்ச்சியடைந்த மருத்துவ முறை காணப்பட்டதற்கு சான்றாக அமைவது எது?

I. புத்ததாச மன்னன் விலங்குகளுக்கு மருத்துவசேவை வழங்கியமை.

II. காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு தனியான வைத்தியசாலை அமைத்தமை.

III. ஆலாஹன பிரிவெனாஅகழ்வில் அறுவைச்சிகிச்சை உபகரணங்கள் கிடைக்கப் பெற்றமை.

IV. பண்டையகாலத்தில் அரசர்கள் மூலிகைத்தோட்டங்களை அமைத்தமை.

15) வரலாற்றுக் காலங்களில் குடியேற்றங்கள் உலர்வலயத்திற்கு அண்டிய பிரதேசங்களில் தோற்றம் பெற பிரதான காரணம் யாது?

I. சிவப்பு, பழுப்பு மண் உலர்வலயத்தில் அதிகம் பரவிக் காணப்பட்டது.

II. உலர்வலயத்தில் குளங்கள் காணப்பட்டமை.

III. 2500 – 10000 mm மழைவீழ்ச்சி கிடைத்தமை.

IV. வருடம் முழுவதும் விவசாயம் மேற்கொள்ள வேண்டிய நீர் காணப்பட்டமை.

16) குற்றவாளி பிடிபடும்வரை அவன் வாழும் கிராம மக்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரி எது?

I. மதர மஞ்சக்க

II. வெகுசன சட்டம்

III. உள்ளூர் தண்டம்

IV. கெடுகனக

17) கொண்ட வட்டுவான் கல்வெட்டுக்கு அமைய உரியகாலத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளா-தவருக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டது. அதற்கான காரணம் யாது?

I. பிரதான சீவனோபாயமாக விவசாயம் காணப்படல்.

II. விவசாயச் செயற்பாடுகளைச் சாதகமான முறையில் மேற்கொள்ள.

III. மழைகாலங்களில் மண்அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க.

IV. விவசாயத்தை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக.

18) அபயகிரி விகாரைக்கு அருகில் ''ரன் தெவிசி கலந்த'' எனக் குறிப்பிடப்படும் தங்க உலோகத்துண்டு கிடைத்ததன் மூலம் வெளிப்படுத்தப்படுவது எது?

I. புராதன காலத்தில் இருந்த உலோகக் கைத்தொழில் பற்றி.

II. புராதன சமூகத்தில் தங்கம் வெள்ளி ஆபரணங்களை அணிந்தனர்.

III. அக்காலத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சி பற்றி

IV. வெளிநாட்டு வர்தகத்தில் நாணயத்திற்கு பதிலாக உலோகங்கள் பயன்படுத்தப்பட்டமை பற்றி.



kalvi.lk

19) புராதன காலத்தில் மூன்றுபோகமும் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரமாக காணப்படும் மூலாதாரம் எது?

I. பனாகடுவ செப்பேடு
II. தோணிகல கல்வெட்டு
III. கொண்ட வட்டுவான் கல்வெட்டு
IV. வேவல் கெட்டிய கல்வெட்டு.

20) அரசி லீலாவதி பொலநறுவையில் மூன்றுமுறை ஆட்சி அமைத்தமை, கல்யாணவதி பொலநறுவையின் ஆட்சியைப் பெற்றமை ஆகியவற்றின் மூலம் வெளிப்படும் கருத்து யாது?

I. கல்யாணவதியைவிட லீலாவதி மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார்.
II. பொலநறுவையின் ஆட்சியைப்பெற கலிங்க பாண்டிய வம்சத்தினர் போட்டியிட்டமை.
III. புராதன சமூகத்தில் பெண்களுக்கு உயர் அந்தஸ்து வழங்கப்பட்டமை.
IV. அரச ஆட்சியில் பெண்களின் பங்கு உயர்மட்டத்தில் காணப்பட்டது.

21) A வரிசையில் உள்ள தகவல்களை B வரிசையில் காணப்படும் விடயங்களுடன் பொருத்தும்போது பெறப்படும் சரியான விடைத்தொகுதி எது?

| | A. | B. |
|---|---|---|
| I. | எகிப்துடன் வெளிநாட்டுத் தொடர்புகளைப் பேணுதல். | A - 6ம் புவனேகபாகு |
| II. | சிங்கள சங்கய எனும் கிளர்ச்சியை ஏற்படுத்தல். | B - நிஸங்கமல்லன் |
| III. | சேனைப் பயிர்ச்செய்கைக்கு விதிக்கப்பட்ட வரியை நீக்கல். | C - 1ம் புவனேகபாகு |
| IV. | உயர்நிலங்களில் உள்ள மரங்களை வெட்டக்கூடாது எனக் குறிப்பிடல். | D - 4ம் மகிந்தன். |

I) B C A D II) A B C D III) C A B D IV) C D A B

22) கம்பளை இராசதானி காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளது. அவற்றில் பொருத்தமற்றவற்றைத் தெரிவு செய்க.

I. சகோதரியின் மகனுக்கு அரசுரிமை கிடைத்தல்.
II. சக்திவாய்ந்த பிரபுக்குடும்பங்கள் இரண்டு அவனுடன் செயற்படல்.
III. ஆரிய சக்கரவர்த்தி சக்தி வாய்ந்தவராக இருத்தல்.
IV. புனித தந்ததாது பாண்டிய சக்கரவர்த்தியால் கடத்தப்பட்டது.

- 23ம், 24ம் வினாக்களுக்கு கீழுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடைதருக.

A - பெலிகல குன்றின் உச்சியில் தலதா மாளிகை அமைத்தல்.
B - பஞ்சு உற்பத்தியை அபிவிருத்தி செய்தல்.
C - தந்துரே போரில் போர்த்துக்கேயரைத் தோல்வியடையச் செய்தல்.
D - போர்த்துக்கேயரை விரட்ட ஒல்லாந்தரின் உதவியை பெறுதல்.
E - ரந்தெனிகல போரில் போர்த்துக்கேயரைத் தோல்வியடையச் செய்தல்.

23) மேற் குறிப்பிட்ட விடயங்களில் 1ம் விமலதர்மசூரியனுடன் தொடர்புடைய கூற்றை மாத்திரம் உள்ளடக்கிய சோடி எது?

I. Aயும் Cயும் II. Bயும் Dயும் III. Cயும் Eயும் IV. Aயும் Bயும்



kalvi.lk

24) இரண்டாம் ராஜசிங்கன் மன்னன் தொடர்பான தகவல்களை மாத்திரம் கொண்ட கூற்று எது?

I. Aயும் Cயும் II. Cயும் Dயும் III. Dயும் Eயும் IV. Aயும் Eயும்

25) போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் மோதல்கள் அமைவதற்குக் காரணமாக அமையாத கூற்று எது?

I. வீதிய பண்டார யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் சென்றபோது பாதுகாப்பு வழங்கியமை.

II. முத்துகுளித்தல் வருமானத்தை இழந்தமை.

III. சங்கிலியன் கத்தோலிக்கம் பரவ எதிர்ப்புத் தெரிவித்தமை.

IV. கறுவா, மிளகு போன்ற பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து பெற்றுக்கொள்ள தடைவிதித்தமை.

- 26ம், 27ம் வினாக்களுக்கு கீழுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடைதருக.

A. பூஜாவலிய

B. தலதா சிரித

C. செலகினி சந்தேசய

D. புதுகுண லங்காரய

E. பன்சிய பனஸ் ஜாதகய

26) மேற்குறிப்பிட்ட இலக்கிய மூலாதாரங்களில் குருநாகல் காலத்தில் மட்டும் எழுதப்பட்ட நூல்களைக் குறிக்கும் விடை எது?

I) B, F II) A, F III) B, E IV) B, C

27) மேலுள்ள இலக்கியங்களுள் தம்பதெனியா காலத்தில் எழுதப்பட்ட நூல்களை கொண்ட விடை எது?

I) A, C II) B, F III) C, E IV) D, F

28) சமையற்கலையில் தேர்ச்சி பெற்ற பெண்ணை "மதுபாச்சிகா" எனக் குறிப்பிடும் நூல் எது?

I. செலஹினி சந்தேசய

II. ரசவாஹினிய

III. சந்தர்மலங்கார

IV. நம்பியா அட்டுவா ஹற்றபதய

29) கீழ்வரும் தகவல்களை சரியாக ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் விடைத்தொகுதி எது?

A. 2ம் இராஜசிங்கன்

B. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

C. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்

D. பிலிமத்தலாவை மகா அதிகாரம்

E. மகா அஸ்தான இளவரசன்

F. சீயம் நிக்காய ஆரம்பித்தல்.

G. 1638ம் ஆண்டு ஒப்பந்தம்

H. பத்திரிப்பு நிர்மாணித்தல்.

I. உபாலி தேரர் குழு வருகைதருதல்.

I) B E H, A D H, C F I

II) C E H, B D G, A F H

III) A E G, B F I, C D H

IV) A E I, B F H, C D G

- கீழுள்ள வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு 30ம், 31ம் ஆகிய வினாக்களுக்கு விடைதருக.

A. செங்கோ தளபதி யின் ஆக்கிரமிப்பு

B. காலிங்கராயர் மற்றும் சோடாங்கனின் ஆக்கிரமிப்பு



kalvi.lk

C. ஜெயவர்த்தனபுர கோட்டையை உருவாக்கல்.

D. சுனேத்ராதேவி பிரிவெனா உருவாக்கல்.

E. கலிங்கமாகனை தோல்வியடையச் செய்தல்.

F. யாழ்ப்பாண இராச்சியம் மத்திய இராச்சியத்திற்குக் கீழ் கொண்டு வரப்படுதல்.

30) கம்பளை இராசதானி காலத்திற்குரிய விடையை மட்டும் கொண்ட தொகுதி எது?

I) A, C II) B, F III) C, E IV) B, C

31) கோட்டை இராசதானி காலத்துடன் தொடர்புடைய விடையைக் கொண்ட தொகுதி எது?

I) B, D II) C, A III) D, F IV) E, F

32) கி. பி. 1594ம் ஆண்டு தந்துரேப் போர் யாருக்கிடையில் மேற்கொள்ளப்பட்டது?

I. 1ம் விமலதர்ம சூரியன் த லதசர்சாகிடையில்

II. மகா அஸ்தான இளவரசன், செனரத் மற்றும் தியோகு த. மெலா

III. 1ம் விமலதர்ம சூரியன் மற்றும் பேரா லோபஸ் தி சூசாவிற்கிடையில்.

IV. 2ம் இராஜசிங்கன் மற்றும் தொன் ஜெரன்மோ அசவேதுக் கிடையில்

33) ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியபோது மலையக அரசனாக இருந்தது யார்?

I. சேனா சம்பத விக்கிரமபாகு மன்னன்

II. இரண்டாம் இராஜசிங்க மன்னன்

III. இராஜாதி இராஜசிங்க மன்னன்

IV. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன்

34) பிரித்தானியாவின் கவனம் இலங்கை மீது ஏற்படக் காரணமாக அமையாதது எது?

I. திருகோணமலைத்துறைமுகம் காணப்பட்டமை.

II. சமய பிரச்சார வியாபார நோக்கம்

III. இந்தியாவின் கிழக்கு கடற்கரையோரத்தின் படை செயற்பாட்டை திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து மேற்கொள்ள முடிந்தமை.

IV. இலங்கையில் கறுவா போன்ற வாசனைத் திரவியம் காணப்பட்டமை.

35) கீழே உள்ள கூற்றுக்களில் இலங்கையின் சமய மறுமலர்ச்சி தொடர்பான பிழையான கூற்று எது?

I. புத்தகாயாவை பாதுகாத்தல் - அநாகரிக தர்மபாலா.

II. வெசாக் விடுமுறைத் தினத்தை பெற்றுக் கொடுத்தல் - ஓல்கொட்.

III. லங்கோபகார அச்சகத்தை நிறுவுதல் - சுமணதிஸ்ஸ தேரர்.

IV. மாளிகாகந்த வித்தியோதய பிலிவெனா – வலானே சித்தாந்த தேரர்

36) மிஷனரிகளூடாக ஆரம்பித்த கல்வி நிறுவனங்களுக்கு எதிராக தேசிய கல்வியினை விருத்திசெய்ய எடுத்த முக்கிய செயற்பாடாக கருதக் கூடியது எது?

I. மும்மொழி கல்வியை போதித்தல்.

II. புத்தகங்கள் மற்றும் கையேடுகளை வழங்குதல்.

III. ஆங்கிலமொழிக் கல்வியை வழங்கும் பௌத்த பாடசாலைகளை நிறுவுதல்.

IV. வெளிநாடுகளுக்குச் சென்று ஆங்கிலமொழிக் கல்வியைப் பெறுதல்.



kalvi.lk

37) மியூறன் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதற்கான காரணம் யாது?

I. 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தை ஆய்வு செய்ய.

II. 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தை ஆய்வு செய்ய.

III. 1797ம் ஆண்டு கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட வரி எதிர்ப்பு வன்முறை தொடர்பாக ஆய்வு செய்ய.

IV. கிராமிய விவசாயம் தொடர்பாக ஆய்வு செய்ய

38) ஐரோப்பிய மறுமலர்ச்சி தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்படும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?

I. புளோரன்ஸ் நகரத்தில் வசித்த மெடிசி குடும்பம் கலைக்கு ஆதரவு வழங்கியமை.

II. அலெக்சாந்திரியா, லிஸ்பன் போன்ற விருத்தி அடைந்த நகரங்கள் உருவாகின.

III. கொன்ஸ்தாந்திநோபிள் வீழ்ச்சி அடைந்தது மறுமலர்ச்சிக்குப் பிரதான காரணம்.

IV. மறுமலர்ச்சிக்காலத்தில் சித்திரக்கலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

39) கைத்தொழில்புரட்சி தொடர்பாக கீழே குறிப்பிடப்படும் கண்டுபிடிப்புக்களுக்குப் பொருத்தமான கண்டுபிடிப்பாளர்களைக் காட்டும் சரியான விடைத் தொகுதி எது?

- ஜெனி இயந்திரம்
- நீராவி இயந்திரம்
- பாதுகாப்பு விளக்கு

I. ஜென்ரோட்டல், ரொபட் பெக்வெல், ஹம்லிடேவி, ஜேம்ஸ்வோட்

II. ஜேம்ஸ் ஹாக்கீவ், ஜென்ரோட்டல், ஜேம்ஸ்வோட், ஹம்ரிடேவி

III. ஜேம்ஸ் ஹாக்கீவ், ஜேம்ஸ்வோட், ஜென்ரோட்டல், ஹம்ரிடேவி

IV. ஜோன்கே, ஜேம்ஸ் ஹாக்கீவ், ஜென்ரோட்டல், ஜேம்ஸ்வோட்

40) கைத்தொழில்புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாக பிரதான காரணமாக அமைவது யாது?

I. மூலப்பொருட்கள் காணப்பட்டமை.

II. நில மற்றும் நீர்ப்போக்குவரத்து விருத்தி ஏற்படல்.

III. வங்கி மற்றும் நிதிச் செயற்பாடுகளில் விருத்தி

IV. பிரித்தானிய சர்வாதிகார செயற்பாடு.



kalvi.lk

| | | | |
|---|---|---|---|
| | றோயல் கல்லூரி – கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | | |
| | தரம் 11<br>Grade **11** | முதலாம் தவணைப் பரீட்சை<br>First Term Exam | 2021<br>**2021** |
| | வரலாறு<br>**History** | நேரம் 2 மணி<br>Time **2** Hores | |

→ **பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.**

→ **பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும், பகுதி IIIல் ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

→ **விடை எழுதவேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஆறு (06) ஆகும்.**

## பகுதி I

01) அ. கீழ் (1) இல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை இலங்கைப் படத்திலும், வினா (2) ல் தரப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்திலும் குறிக்க.

(1) தெதுறு ஓயா, கல்ஓயா, லங்காபட்டின, நீர்கொழும்பு, கந்தரோடை, கோட்டை, மொம்பரிப்பு, உடமல்ல, கலாஓயா, கண்ணொருவ, மஹியங்கணை, கொடவாய. (8 புள்ளி)

(2) விஸ்பன், மத்தியதரைக்கடல், உரோம், மலாக்கா நீரிணை, கிரேக்கம். (6 புள்ளி)

ஆ. 1. கீழுள்ள A, B, C, D யின் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று தகவல்களுக்கு உரிய விடையை எழுதுக.

A. - இலங்கையைச் செரண்டிப் என அழைத்தவர்கள்?

B. - பைபிளை ஆங்கிலமொழிக்கு மொழிமாற்றம் செய்தவர்?

C. - போர்த்துக்கேயரால் யாழ்ப்பாணத்திற்கு நியமிக்கப்பட்ட போர்த்துக்கீசருக்கு சார்பான ஆட்சியாளர் யார்?

D. - திரிலோகசுந்தரியைத் திருமணம் செய்த அரசன் யார்? (4 புள்ளி)

02) A மற்றும் B ஆல் காட்டப்பட்டுள்ள படங்களை அடிப்படையாக கொண்டு கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

(ii)



1. A யினால் குறிப்பிடப்படுவது யாது?
2. இவை கிடைக்கப்பெற்ற இடங்கள் எவை?
3. இவ் உபகரணங்களின் பயன்பாடு யாது?
4. இந் நிர்மாணங்கள் புராதன சமூகம் தொடர்பாக வழங்கும் தகவல் யாது?

(4 புள்ளி)



kalvi.lk

(iii) 

1. B உருவில் காட்டப்படுவரின் பெயர் யாது?

2. இவரால் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்பு யாது?

3. இக்கண்டுபிடிப்பால் விருத்தியடைந்த துறை யாது?

4. இவரின் விசேட அம்சம் யாது?

(4 புள்ளி)

**பகுதி – II**

02.(1) வரலாற்றை வரையறை செய்யும் மூலாதாரமாக பயன்படுத்தக்கூடிய தொல்பொருள் மூலாதாரத்தின் பிரிவுகள் எவை? (3 புள்ளி)

(2) சித்திரம் மற்றும் செதுக்கல்கள் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய விடயங்கள் 4 குறிப்பிடுக. (4 புள்ளி)

(3) தொல்பொருட்கள் என்றால் என்ன என்பதை குறிப்பிட்டு வரலாற்றைக் கற்பதற்கு தொல்பொருள்களின் முக்கியத்துவம் 2 குறிப்பிடுக. (5 புள்ளி)

(4) தொல்பொருட்கனை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை 3 விடயங்களின் கீழ் விளக்கி எழுதுக. (6 புள்ளி)

03.(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலய கற்குகைகள் 3 தருக. (3 புள்ளி)

(2) A இல் இருந்து D வரை உள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.

A - வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் ஈரவலய வெட்டவெளி வாழ்விடம் எது?

B - ஆரம்ப காலத்தில் கல்வெட்டுக்கள் உருவாக்க பயன்பட்ட எழுத்து எது?

C - "துகத ரஜ" என குறிப்பிடும் கல்வெட்டு எது?

D - வசப மன்னனின் பின் அசை உரிமையை பெற்றவன் யார்? (4 புள்ளி)

(குட்டகண்ணதிஸ்ஸன், பிராமி எழுத்துக்கள், எம்புல் அம்பே, ஹுட்டன் சமவெளி, வங்கநாசிகதிஸ்ஸ மன்னன், சமஸ்கிருதம், யடகலென, பெல்லன் பதிபெலஸ்ஸ)

(3) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் குடியேற்றங்களின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய விடயங்கள் இரண்டை விளக்குக. (5 புள்ளி)

(4) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் தொழில்நுட்பம் தொடர்பான கருத்துக்களை 3 விடயங்களின் கீழ் விளக்கிக் காட்டுக. (6 புள்ளி)



kalvi.lk

04. (1) கீழே குறிப்பிட்ட குளங்களை கட்டிய மன்னர்களின் பெயர்களை குறிப்பிடுக.

A - காலவாவி :- ………………………………………………….

B - அபயவாவி :- …………………………………………………

C - மின்னேரியா வாவி :- ………………………………………………… (3 புள்ளி)

(2) A, B, C, D யினால் குறிப்பிடப்படும் பண்டைய தொழில்நுட்பத்துடன் தொடர் ஆக்கங்களைக் குறிப்பிடுக.

A. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது அன்றாட தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்திய உபகரணம் எது?

B. முன் வரலாற்றுக் காலத்தில் மட்பாண்டம் உருவாக்க பயன்படுத்திய உபகரணம் எது?

C. குளத்திலிருந்து நீரை வெளியேற்றும்போது ஏற்படும் அமுக்கத்தை குறைக்க உருவாக்கிய அமைப்பு எது?

D. தெதிகம யானை விளக்கு உருவாக்க பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் எது?

(4 புள்ளி)

(3) (A) பாரிய குளங்களை அமைப்பதில் முன்னோடியாக விளங்கிய மன்னன் யார்?

(B) அவன் பாரிய குளங்களை அமைத்ததற்கான காரணங்கள் 2 விளக்குக. (5 புள்ளி)

(4) கடந்தகாலத்தில் இலங்கையில் இரும்புருக்கு தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்து காணப்பட்டது என்பதற்கான சான்றுகள் 2 குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

(5) (1) இரண்டாம் நகரமயமாக்கலில் கலிங்க மாகனிடம் இருந்து பாதுகாப்பிற்காக கோட்டைகளை அமைத்துக்கொண்ட தலைவர்கள் மூவரின் பெயரைதருக. (3 புள்ளி)

(2) இரண்டாம் நகரமயமாக்கலின் பொருளாதார அம்சங்கள் 02 குறிப்பிடுக. (4 புள்ளி)

(3) அலங்கார நீர்ப்பூங்காக்கள் பாதுகாப்பு கோட்டைகள் என்பவற்றின் அடிப்படையில் சிகிரியா அமைக்கப்பட்டுள்ளது என்ற இரு கருத்துக்களின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(4) பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குப்பின் இலங்கையில் பாரிய நீர்ப்பாசன தொழில்நுட்பங்கள் உருவாக்கப்படாமைக்கான காரணங்கள் 3 விளக்குக. (6 புள்ளி)

(6) (1) கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியர் தமது ஆட்சியை மேற்கொண்ட விதங்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

(2) பிரித்தானியர் 1803ம் ஆண்டு கண்டியை கைப்பற்ற விரும்பியதற்கான காரணங்கள் 3 தருக. (4 புள்ளி)

(3) 1818ம் ஆண்டு சுதந்திரக் போராட்டத்திற்கான காரணங்கள் 3 குறிப்பிட்டு 2 ஐ விளக்குக. (5 புள்ளி)



kalvi.lk

(4) போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் போன்றோர் மலையகத்தை பலமுறை கைப்பற்ற முயற்சி செய்தும் முடியாமல் போனமைக்கான காரணங்கள் மூன்றினை விளக்குக. (6 புள்ளி)

(7) (1) 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கு காரணமான கோல்புறுக் சீர்திருத்தத்தின் சிபார்சுகள் மூன்று எழுதுக. (3 புள்ளி)

(2) கீழுள்ள தகவல்களுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை எழுதுக.

A – மயாதுன்னைக்கு உதவி செய்த கள்ளிக்கோட்டை அரசன் யார்?

B – 1795ம் ஆண்டு கண்டிய அரசனைசந்தித்த ஆங்கிலேய தூதுவர் யார்?

C – தலதாமாளிகையில் எண்கோண பத்திரிப்பை அமைத்த அரசன் யார்?

D – கண்டியின் இறுதி சிங்கள அரசன் யார்? (4 புள்ளி)

(3) கீழுள்ளவர்களில் ஒருவரை தெரிவு செய்து தேசிய, சமய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குக.

A – அனாகாரிக தர்மபாலா

B – ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்

C – ஆறுமுகநாவலர் (5 புள்ளி)

(4) பௌத்த மறுமலர்ச்சி பரம்பலின் அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (6 புள்ளி)

## பகுதி – III

(8) (1) மறுமலர்ச்சி ஏற்பட்ட இத்தாலிய நகரங்கள் மூன்று எழுதுக. (3 புள்ளி)

(2) நாடுகாண் பயணங்கள் வளர்ச்சி அடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் நான்கு தருக. (4 புள்ளி)

(3) மறுமலர்ச்சியால் ஐரோப்பிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(4) மறுமலர்ச்சியால் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் மூன்றை விளக்குக. (6 புள்ளி)

(9) (1) கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட பிரதான துறைகள் 3 எழுதுக. (3 புள்ளி)

(2) கைத்தொழிற் புரட்சியால் (A) தொடர்பால் (B) போக்குவரத்து துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு வீதம் எழுதுக. (4 புள்ளி)

(3) கைத்தொழிற் புரட்சியால் இலங்கையின் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டை விளக்குக. (5 புள்ளி)

(4) கைத்தொழிற் புரட்சியால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் மூன்றை விளக்குக. (6 புள்ளி)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457